(7) அரசினர் தீர்மானங்கள்.

(அ) 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒரு வகை செய்தல்) விதிகளில் செய்யக் கருதியுள்ள வரைவுத் திருத்தங்கள் குறித்து.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 94-வது பிரிவிலுள்ள (1) உட்பிரிவின் கீழ், தமிழ்நாடு 1965-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகளில் செய்யக் கருதியுள்ள கீழ்க்கண்ட சில வரைவுத் திருத்தங்கள் * மேற்குறிப்பிட்ட உட்பிரிவின் வரம்பு நிபந்தனைக்கிணங்க ஏற்பளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(ஆ) சென்னை, மதுரை மாநகராட்சிகள், மாவட்ட நகராட்சிகள் சட்டங்களின் கீழ் கண்டுள்ள விதிகளுக்கு வரைவுத் திருத்தங்களை ஏற்பது குறித்து.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, (1) சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) V-வது விவர அட்டவணையின் III மற்றும் IV-ம் பாகங்களில் அமைந்துள்ள விதிகளுக்கு தமிழ்நாடு ஆளுநர், விதி 347-ன் உபவிதி (3)-ன்படி கொண்டுவரும் கீழ்க்காணும் வரைவு திருத்த விதிகளை † ஏற்க வேண்டும்."

(2) மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) III-வது விவர அட்டவணையின் III, IV-ம் பாகத்தில் உள்ள விதிகளுக்கு தமிழக ஆளுநர் மேற்படி சட்டத்தின் பிரிவு 431-ன் உள்பிரிவு (3)-ன்படி கொண்டு வரும் வரைவு திருத்த விதிகளை † ஏற்க வேண்டும்.

(3) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) IV-வது விவர அட்டவணையில் II-ம் பாகத்தில் கண்டுள்ள விதிகளுக்குத் தமிழ்நாடு ஆளுநர் மேற்படி சட்டத்தின் விதி 305-ன் உபவிதி (1)-ல் கண்டுள்ளபடி கொண்டுவரும் கீழ்க்காணும் வரைவு திருத்த விதிகளை † ஏற்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–51 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

---

*511–515-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

†515–520-ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.